அ.வ.எண்: 173/2015 நாள்:13.02.2024

**வா.சா.3. திருநாவுக்கரசு (செயலாளர், கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் வளர்ச்சி வங்கி, திருவையாறு )**

**1,3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். சித்ரா என்பவர் 1977 ஆம் ஆண்டு எங்கள் வங்கியில் லோன் வாங்கியுள்ளாரா என்றால் எந்த கடனும் பெறவில்லை. நீதிமன்ற அழைப்பாணையுடன் ஒரு மனு வந்ததா என்றால் ஆமாம். மேற்படி மனுவில் 1977 ஆம் ஆண்டு வாதி சித்ரா என்பவர் கடன் வாங்கியதாக கண்டுள்ளதா என்றால் ஆமாம்.

2) நான் சொன்ன முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1991 ஆம் ஆண்டு கடன் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் வங்கியின் ஆவணங்கள் அடிப்படையில் கூறியுள்ளேன். எந்த ஆண்டிலிருந்து மேற்பார்வையாளராக பணிபுரிகிறேன் என்றால் 1997 ஆம் ஆண்டிலிருந்து பணிபுரிகிறேன். தற்போது என்ன பதவியில் உள்ளேன் என்றால் செயலாளராக உள்ளேன்.

3) 1991 ஆம் ஆண்டு சித்ரா க.பெ. கலிய மூர்த்தி என்பவர் பெயரில் தான் கடன் வாங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம் .மேற்படி கடன் எப்போது தள்ளுபடி செய்யப்பட்டதென்றால் 2006 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. எங்கள் வங்கியில் வாதி சித்ரா 2004 ஆம் ஆண்டுக்கு பிறகு ஏதாவது பணம் செலுத்தி பரிவர்த்தனை செய்துள்ளாரா என்றால் இல்லை. கடன் தள்ளுபடி செய்யப்பட்ட ரசீதை யார் வாங்கி சென்றார் என்றால் 02.01.2013 அன்று வாதி சித்ரா வாங்கி சென்றுள்ளார். மேற்படி ரசீது வாங்கி சென்ற காலத்தில் தாவா சொத்தில் வாதி அனுபவித்து வந்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை:** இல்லை. /ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.